## 28.22 மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு அதிகாரம் வழங்குதல் – மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை செயல்பாடு குறித்து அதிகாரங்கள் வழங்குதல்

மக்கள் நல்வாழ்வு (ம) குடும்ப நலத் (ஏசி 2) துறை

அரசாணை (நிலை) எண் 274 நாள் : 08.06.1999

படிக்க :

ஊரக வளர்ச்சித்துறை செயலர் அவர்களின் நேர்முக கடித .எண். 14532/சி2 /99 / நாள். 11.05.1999

**ஆணை**

உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் வழங்குவது குறித்து அரசு , மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் உயர்மட்டக் குழுவை அமைத்தது. இந்த உயர்மட்டக் குழு மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் வழங்குவது குறித்து விவாதித்து தனது இறுதி அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்தது. இந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ள பரிந்துரைகள் அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு இறுதி முடிவுகள் எடுக்கப்பட்டன.

(2) மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையைச் சார்ந்த (குடும்ப நலம்) பரிந்துரை மீது எடுத்த முடிவுகள் அடிப்படையில் பின்வரும் ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

அ. கிராம ஊராட்சிகள் தங்களது பகுதியில் குடும்ப நல மேம்பாட்டிற்கென செயல்படுத்தப்படும் திட்டங்களில் ஒன்றான கருவுற்ற தாய்மார்களுக்கு மருத்துவ வசதி மற்றும் பேறு காலத்திற்கு முன்னும் பின்னும் எடுக்க வேண்டிய மருத்துவ நடவடிக்கைகள், சுகபிரசவம் ஆவதற்கு வேண்டிய அறிவுரைகள் குறித்து மருத்துவ பணியாளர்கள் தக்க பயிற்சி பெற உதவுவது. மேலும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் தங்களது பகுதியில் அடிப்படை ஆதார வசதிகளை பெருக்குதல். கிராம அளவில் மகளிர் மன்றங்களையும் இதர பிற மக்கள் குழுக்களையும் அமைத்து கருவுற்றிருக்கும் பெண்கள் மற்றும் பின்னாட்களில் கருவுறவிருக்கும் பெண்களிடையே பிரசவத்திற்கு முன்னும் பின்னும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள், சிறு குடும்ப நெறி, தாய்பால் போன்றவற்றின் மீது சிறப்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களின் குடும்ப நலனைக் காக்க தக்க அறிவுரைகள் வழங்கும் வகையில் உதவலாம். இந்த அதிகார வரம்பு விபரம் இணைப்பு 1ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆ. கிராம ஊராட்சி ஒன்றியங்கள் தங்களது ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் கிராம அளவில் மற்றும் பல கிராம ஊராட்சிகளில் நடைபெறும் குடும்ப நலன் காக்கவும் திட்டங்களை மேற்பார்வையிடுதல் மற்றும் குடும்ப நலதிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளும் மருத்துவமனைகளுக்கு தேவையான மருத்துவக் கருவிகள் வழங்குவதற்கு குடும்ப நலத்துறையின் சம்மந்தப்பட்ட அலுவலர்களை தொடர்பு கொண்டு மேல் நடவடிக்கை எடுக்க உதவலாம். இந்த அதிகாரவரம்பு விவரம் இணைப்பு – 2ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

இ. மாவட்ட ஊராட்சிகள் குடும்ப நலத்துறை சார்ந்த செயல்பாடுகள் குறித்து இணைப்பு 3ல் குறிப்பிட்டுள்ளவாறு தகுந்த ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் வழங்கலாம் எனவும் கருத்தரங்குகள் நடத்தலாம் எனவும் அரசு ஆணையிடுகிறது.

ஈ). கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கான வளர்ச்சித் திட்டத்தை உருவாக்குவதற்கு இணைப்பு 4ல் குறிப்பிட்டுள்ளவாறு சம்மந்தப்பட்ட திட்டத்திற்கும் பொறுப்பேற்று உள்ளாட்சி அமைப்புகளுக்கு உதவி புரிய வேண்டும்.

உ). ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள், மருத்துவம் மற்றும் குடும்பநலத் துறை சார்ந்த செயல்பாடுகள் குறித்து இணைப்பு 5ல் குறிப்பிட்டுள்ள அலுவலர்களுடன் ஆய்வு செய்து தகுந்த ஆலோசனைகளை வழங்கலாம் எனவும் அரசு ஆணையிடுகிறது.

3). மேற்குறிப்பிட்ட பொறுப்புகளையும் அதிகாரங்களையும் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகள் சிறப்புற செயல்படுத்தும் வகையில் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் துறை இயக்குநரும், பொது சுகாதாரம் மற்றும் நோய்

தடுப்புத் துறை இயக்குநரும் குடும்ப நலத்துறை இயக்குநரும் மாவட்ட அளவிலான மற்றும் பிற களப்பணியாளர்களுக்கு விரிவான அறிவுரைகள் வழங்குமாறும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**வ.விஸ்வநாதன்**
அரசு செயலாளர்

## குடும்ப நல்வாழ்வு
## இணைப்பு – 1.
## கிராம ஊராட்சிகள்

1. குடும்ப நலமேம்பாட்டிற்கென செயல்படுத்தப்படும் திட்டங்களில் ஒன்றான கருவுற்ற தாய்மார்களின் மருத்துவ வசதிகள் குறித்து சுகாதாரத் துறை பணியாளர்கள் பதிவேடுகள் பராமரிப்பதற்கு உதவுதல்.

2. கர்ப்பிணி பெண்களின் பேறு காலங்களில் முறையான மருத்துவ உதவிகள் அளிக்கும் பொருட்டு அந்தந்தப் பகுதிகளில் உள்ள தாய் சேய் நல மையங்களுடன் தொடர்பு கொண்டு தேவையான உதவிகளைச் செய்தல்.

3. பேறுகாலத்திற்கு முன்னும் பின்னும் எடுக்க வேண்டிய மருத்துவ நடவடிக்கைகள் சுகபிரசவம் ஆவதற்கு வேண்டிய அறிவுரைகள் மற்றும் பிறந்த குழந்தைக்கான மருத்துவ பாதுகாப்பு ஆகியவை குறித்து மருத்துவப் பணியாளர்கள் தக்க பயிற்சிகள் பெறுவதை உறுதி செய்து அவர்கள் முறையான பயிற்சி பெற உதவுவது.

4. அந்தந்த பகுதிகளில் பணியாற்றும் பல்வேறு பணி தொடர்பான தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் தர்ம ஸ்தாபனங்களின் ஆதரவைத் திரட்டி, கருத்தரித்திருக்கும் பெண்கள் அனைவரும் மருத்துவ வசதி பெறும் வகையில் தாய் மற்றும் குழந்தையின் நோயற்ற வாழ்விற்கான அடிப்படை ஆதார வசதிகளைப் பெருக்குதல்.

5. குழந்தைகளுக்கு தாய்பால் அளித்தல் மற்றும் நோய் தடுப்பு சக்தியை அதிகரித்தல் போன்ற பொருள்களின்பால் பெண்களிடையே போதிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த மருத்துவத் துறை பணியாளர்களுக்கு உதவுதல்.

6. வைட்டமின் அ. இரும்பு மற்றும் அயோடின் சத்துக் குறைவை கட்டுப்படுத்தல், வெறிநாய் கடி தடுப்பு மற்றும் சிகிச்சை ஆகிய சேவைகளை ஒருங்கிணைத்து, சேவைகள் திறம்பட வழங்கும் வகையில் உதவுதல். இது தொடர்பாக தாய்சேய் நலப் பணியாளர்களுக்காக கிராம அலுவலர்களுடனும், சிறுகுடும்ப நலத்துறையுடன் சேர்ந்த காலமுறையிலான ஆய்வுக் கூட்டங்களை நடத்தி ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு உதவலாம்.

7. உயிர்க்கொல்லி நோய், பால்வினை நோய்கள் மற்றும் எய்ட்ஸ் நோய் குறித்து சிறப்பு விழிப்புணர்வு முகாம்களுக்கு கிராம அளவில் ஏற்பாடுகள் செய்தல்.

8. கிராம அளவில் மகளிர் மன்றங்களையும், இதர பிற மக்கள் குழுக்களையும் அமைத்து கருவுற்றிருக்கும் பெண்கள் மற்றும் பின்னாட்களில் கருவுறவிருக்கும் பெண்களுக்கும் பிரசவத்திற்கு முன்னும், பின்னும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் , சிறுகுடும்ப நெறி, தாய்ப்பால் போன்றவற்றின் மீது சிறப்பான விழிப்புணர்வை ஏற்படுத்திஅவர்களின் குடும்ப நலனைக் காக்க தக்க அறிவுரைகள் வழங்கும் வகையில் உதவலாம்.

## இணைப்பு – 2
## மாவட்ட ஊராட்சிகள்

1. மாவட்ட அளவில் குடும்ப நலம் சார்ந்த திட்டப் பணிகளின் செயல்பாட்டு தகுதி அறிக்கையை தயாரித்து, அதனை பிற மாவட்டங்கள் மற்றும் மாநிலத்தின் அறிக்கையுடன் ஒப்பிட்டுப் பார்த்து அந்தந்த மாவட்டத்திலுள்ள அறிக்கையின் ஏற்றத் தாழ்வுகளின் மேல் கருத்துரைகளை மாவட்ட ஊராட்சிகள் வழங்கலாம். இதனை அடிப்படையாகக் கொண்டு மாவட்ட குடும்ப நலத் திட்டக் கருத்துருக்களை தயாரித்து செயல்பாட்டிற்காக அதனை மாநில குடும்ப நல இயக்குநருக்கு அனுப்பலாம்.

2. திட்டங்களின் செயல்பாட்டிலுள்ள குறைகளை பார்வையிட்டு கண்டறிந்து அவைகளை நீக்க சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் ஆதரவினைத் திரட்டி, திட்டங்கள் திறம்பட செயலாக்க வழிவகைகள் செய்யலாம்.

3. பொருளாதார வளங்களைப் பொருத்தவரை கிராம மற்றும் ஊராட்சி ஒன்றிய அளவிலான வளங்கள் மற்றும் ஆதாரங்களையும், துணை வரவு செலவு திட்ட வளஆதாரங்களையும், உயர்த்தும் பொருட்டு சம்மந்தப்பட்ட துறைகள் மற்றும் அந்தந்த பகுதிகளில் பணியாற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் தர்ம ஸ்தாபனங்களை அணுகி தேவையான முயற்சிகளை மேற்கொள்ளுதல்.

4. குடும்ப நலன் சார்ந்த திட்டங்களின் முறையான நடவடிக்கைகளுக்கும் செயல்படுத்தப்படும் பணிகளின் மீதான சமூக தணிக்கை முறைகளுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட மகளிர் காப்பாளர்களிடமிருந்து உதவிகளைப் பெற்று ஒருங்கிணைத்தல்.

5. பேறு கால காப்பு பணிகள் குறித்து மாவட்ட அளவிலான விவரக் குறிப்பினை தயாரித்து வழங்குதல் மற்றும் தகவல்பரிமாற்ற மேலாண்மை முறையினை மேம்படுத்துதல்.

6. ஊராட்சி ஒன்றியத்தால் குடும்ப நலம் சார்ந்த திட்டப் பணிகளின் நடவடிக்கைகளின் செயல் விளைவுகளை மதிப்பீட்டு குறைகளைக் கண்டறிந்து அவற்றை களைவதற்கான வழிவகைகளை ஆய்ந்து அறிவுரைகள் வழங்குதல்.

7. அந்தந்த பகுதிகளில் தேவையான மருந்துப் பொருட்கள் இருப்பில் இருக்கவும் இருப்பில் இருக்கும் மருந்து பொருட்களை வைத்து பாதுகாக்கத் தேவையான இடவசதி, குளிர்சாதன வசதிகள் ஆகியவை ஏற்படுத்தவும் அரசுக்கு பரிந்துரைத்தல்.

8. குடும்ப நலத் திட்ட இயக்கங்களிலும் திட்டத்தின் செயல்பாட்டிலும் தனியார் மருத்துவர்களையும், மருத்துவமனைகளையும் ஒன்றிணைத்து மருத்துவச் சேவைகள் அனைத்து மக்களுக்கும் கிடைக்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

9. குடும்ப நலத் திட்டத்தின் நடைமுறை செயல்திறனை மேம்படுத்துவதற்கு கருத்தரங்குகள், கலந்துரையாடல் நிகழ்ச்சிகள், பணிமணை கூட்டங்களையும் மாவட்ட அளவில் நடத்துதல் / நடத்துவதற்கு உதவுதல்.

## இணைப்பு – 3

### மருத்துவம் மற்றும் பொது சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை

1. சுகாதார துணை நிலையங்கள் பற்றி ஆரம்ப சுகாதார நிலையத்திலுள்ள மருத்துவ அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.

2. ஆரம்ப சுகாதார நிலையங்கள் பற்றி ஆரம்ப சுகாதார நிலையத்திலுள்ள மருத்துவ அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.

3. வட்ட மருத்துவமனை மற்றம் பிற மருத்துவமனைகள் பற்றி இணை இயக்குநர்/ துணை இயக்குநர் (மருத்துவம்) ஆகியோருடன் ஆய்வு செய்யலாம்.

### மருத்துவம் மற்றும் பொது சுகாதாரத் துறை

### (மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருந்தகங்கள்)

1. சுகாதார துணை நிலையங்கள் பற்றி துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) அவர்களுடன் ஆய்வு செய்யலாம்.

2. ஆரம்ப சுகாதார நிலையங்கள் பற்றி துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) அவர்களுடன் ஆய்வு செய்யலாம்.

3. அரசு மருந்தகங்கள் மற்றும் நடமாடும் மருந்தகம் பற்றி துணை இயக்குநர் (சுகாதாரம்), துணை இயக்குநர் (மருத்துவம்) ஆகியோருடன் ஆய்வு செய்யலாம்.

4. வட்டார மருத்துவமனை மற்றும் இதர மருத்துவமனைகள் பற்றி இயக்குநர் (சுகாதாரம்), துணை இயக்குநர் (மருத்துவம்) அவர்களுடன் ஆய்வு செய்யலாம்.

5. மகப்பேறு நிலையங்கள் பற்றி துணை இயக்குநர் (சுகாதாரம்), துணை இயக்குநர் (மருத்துவம்) அவர்களுடன் ஆய்வு செய்யலாம்.